அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 23/93

அரசாங்க நிருவாக அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 07.
1993.09.27 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள்,
சட்ட நியதிச் சபைகளின் தலைவர்கள்
அனைவருக்கும்.

அமைய, தற்காலிக, பதில் பணியாளர்களுக்கும் பயிலுநர்களுக்கும்
நிரந்தர நியமனங்கள் வழங்கல்.

1993, யூன் 17 ஆந் திகதிய 14/93ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு உங்கள் அவதானம் கோரப்படுகிறது.

02. அமைய, தற்காலிக, பதில் பணியாளர்களுக்கு ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காகச் சலுகைப் புள்ளிகள் வழங்கல் 1993.05.09ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும். அதனால் 1993.05.09ஆந் திகதியன்றோ அதன் பின்னரோ வர்த்தமானியில் வெளியிடப்படும் எந்தவோர் ஆட்சேர்ப்புக்கும் சலுகைப்புள்ளிகள் கூட்டப்பட வேண்டும்.

03. 1993.06.17ஆந் திகதிய 14/93ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றுமிடத்து அரச நிறுவகங்களில் சேவையாற்றும் பயலுநர்கள் அனைவருக்கும் அமைய, தற்காலிக, பதில் பணியாளர்கட்கு வழங்கப்பட்டுள்ள சலுகை நீடிக்கப்படுகின்றது.

04. 1993.07.01ஆந் திகதிய முதல் பயலுநர்களாக அரச நிறுவனங்களில் இணைக்கப்படுவர்களின் பயிற்சி ஓராண்டு மட்டும் வரையறுக்கப்படுவதுடன் அதற்கு மேற்பட்ட காலத்துக்கு மேலும் நீடிக்கப்படலாகாது. ஆயினும் இவ்வரையறை பொறியியல் மற்றும் பிற அதையொத்த தொழில்நுட்ப துறைகளுக்குமான பயிலுநர்களுக்குப் பொருத்தமுடையதாகாது.

ஒப்பம். (எம்.டி.டி. பீரிஸ்)
செயலாளர்
அரசாங்க நிருவாக அமைச்சு.